தினமணி

# 2 லட்சம் பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.27 கோடி ஊக்கத் தொகை

First Published : 13 Aug 2012 04:26:04 AM IST



கூடுதல் வருமானம் ஈட்டியதற்காக பால் உற்பத்தியாளருக்கு சென்னை தலைமைச் செயலகத்தில் சனிக்கிழமை ஊக்கத் தொகையை வழங்குகிறார் முதல்வர் ஜெயலலிதா. உடன், (இடமிர

சென்னை, ஆக.12: கூடுதல் வருவாயை ஈட்டிய மதுரை, திருச்சி, சேலம், கோவை மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களைச் சேர்ந்த 2.02 லட்சம் பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.27 கோடி ஊக்கத் தொகை வழங்கப்பட்டது.

இந்த ஊக்கத் தொகைக்கான காசோலையை முதல்வர் ஜெயலலிதா சனிக்கிழமை வழங்கினார்.

கோவை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் ரூ.15 கோடியே 40 லட்சம் லாபம் ஈட்டப்பட்டுள்ளது. இதனால் 21,189 பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டருக்கு 50 பைசா வீதம் ரூ.4 கோடியே 10 லட்சம் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் ரூ.7 கோடியே 23 லட்சம் லாபம் ஈட்டியுள்ளது. இதனால் 27,856 பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டருக்கு 50 பைசா வீதம் ரூ.2 கோடியே 41 லட்சம் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் இரண்டு ஆண்டுகளில் முறையே ரூ.13 கோடியே 90 லட்சமும், ரூ.15 கோடியே 74 லட்சமும் லாபம் ஈட்டியுள்ளது.

முதலாண்டு லாபம் ஈட்டியுள்ள 52,277 பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டருக்கு 50 பைசா வீதம் ரூ.7 கோடியே 96 லட்சமும், இரண்டாம் ஆண்டு லாபம் ஈட்டிய 52,437 பால்

உற்பத்தியாளர்களுக்கு லிட்டருக்கு 50 பைசா ரூ.7 கோடியே 27 லட்சமும் ஊக்கத் தொகை அளிக்கப்படுகிறது.

திருச்சி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் ரூ.10 கோடியே 84 லட்சம் லாபம் ஈட்டியுள்ளதால் 48,414 பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.5 கோடி ஊக்கத் தொகை வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

## பருவமழை பொய்த்ததால் கருகும் தோட்டப் பயிர்கள்: 20 ஆயிரம் ஏக்கரில் நெல் உற்பத்தி பாதிப்பு

First Published : 13 Aug 2012 09:28:03 AM IST

தேனி, ஆக. 13: தேனி மாவட்டத்தில், இந்த ஆண்டு தென்மேற்குப் பருவமழை பொய்த்ததால் நீராதாரங்கள் வறண்டு, தண்ணீரின்றி தோட்டப் பயிர்கள் கருகி வருகின்றன.

பெரியாறு அணையில் இருந்து போதிய தண்ணீர் திறக்க முடியாமல் முதல்போக நெல் சாகுபடி தடைபட்டுள்ளதால், 20 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் 18 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் தென்னை, 5,000 ஹெக்டேர் பரப்பளவில் வாழை, 2,000 ஹெக்டேர் பரப்பளவில் திராட்சை, 6,000 ஹெக்டேர் பரப்பளவில் கொட்டை முந்திரி, 3,000 ஹெக்டேர் பரப்பளவில் மா, மலை கிராமங்களில் 6,500 ஹெக்டேர் பரப்பளவில் காபி, ஏலம், மிளகு, எலுமிச்சை பயிர்கள் சாகுபடி நடைபெற்று வருகிறது.

கூடலூர், கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர், மார்க்கையன்கோட்டை, குச்சனூர், வீரபாண்டி உள்ளிட்ட பகுதிகளில் 20 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் இரண்டு போக நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது.

தென்மேற்கு பருவ மழை பொய்த்ததால் மூலவைகை ஆறு, வைகை ஆறு, வராகநதி, கொட்டகுடி ஆறு ஆகியவற்றில் தண்ணீர் வரத்து இல்லை. மாவட்டத்தில் உள்ள 135 பாசனக் கண்மாய், கசிவுநீர்க் குட்டை மற்றும் தடுப்பணைகள் வறண்டு காணப்படுகின்றன. கிணறுகளில் நிலத்தடி நீர் மட்டம் கணிசமாகக் குறைந்து வருகிறது.

தோட்டப் பயிர் விவசாயிகள் பெரும்பாலும் சொட்டுநீர்ப் பாசனம் அமைத்திருந்தும், கிணற்றில் போதிய தண்ணீர் இல்லாததாலும், குறைந்த நேரம் மட்டும் மின் விநியோகம் வழங்குவதாலும் தண்ணீரின்றி பயிர்கள் கருகி வருகின்றன.

மழையில்லாதால், இந்த ஆண்டு தோட்டப் பயிர்களில் மகசூல் இழப்பும், நஷ்டமும் ஏற்படும் என்று விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

நெல் சாகுபடி பாதிப்பு: பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதிகளில், போதிய மழை இல்லாதால் அணை நீர்மட்டம் கடந்த சில நாள்களாக சராசரி 114 அடி என்ற அளவிலேயே உள்ளது. குடிநீர் தேவைக்கு மட்டும், அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையில் குறைந்த

அளவு தண்ணீர் இருப்பு உள்ளதாலும், மழையில்லாததாலும் முதல்போக நெல் சாகுபடிக்கு நாற்று பாவும் பணியை நிறுத்தி வைக்குமாறு, மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது. முதல்போக நெல் சாகுபடி தடைபட்டுள்ளதால், இந்த ஆண்டு மாவட்டத்தில் திட்டமிட்டபடி உணவு உற்பத்தி இலக்கை எட்டுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

மழையை எதிர்பார்த்து கம்பம் சின்னவாய்க்கால், கூடலூர் வைரவன் வாய்க்கால், பேயத்தேவன் வாய்கால், குச்சனூர், மார்கையன்கோட்டை ஆகிய பகுதிகளில் விவசாயிகள் தற்போது 2,500 ஏக்கர் பரப்பளவில் நெல் நாற்று நடவு செய்துள்ளனர்.

தொடர்ந்து மழையின்றி பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்க முடியாத நிலை ஏற்பட்டால், இந்தப் பயிர்கள் முற்றிலும் கருகும் அபாயத்தில் உள்ளதால் விவசாயிகள் குழப்பத்தில் உள்ளனர்.

மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் எம். பாண்டியன் கூறியது: பருவமழை பொய்த்து விவசாயம் பாதிக்கப்பட்டுள்ள தேனி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க, மாவட்ட நிர்வாகம் அரசுக்குப் பரிந்துரைக்க வேண்டும். பயிர்களைக் காப்பாற்ற முடியாமல் கடன் சுமையில் உள்ள விவசாயிகளுக்கு தொடக்க கூட்டுறவு கடன் சங்கங்களில் பெற்றுள்ள பயிர்கடனை திரும்பச் செலுத்த கால அவகாசமும், வட்டி சலுகையும் வழங்க வேண்டும் என்றார்.

## விளை நிலங்கள் காட்டேஜ்களாக மாறி வருவதால் காய்கறி உற்பத்தி பாதிப்பு

First Published : 13 Aug 2012 09:09:53 AM IST

கொடைக்கானல், ஆக 13: கொடைக்கானல் பகுதிகளில் விளைநிலங்கள் அழிக்கப்பட்டு, கட்டடங்கள் கட்டப்பட்டு வருவதால் காய்கறி உற்பத்தி பாதிக்கப்பட்டு வருகிறது.
கொடைக்கானலைச் சுற்றி பெருமாள்மலை,
சின்னூர்,வில்பட்டி,அட்டுவம்பட்டி,பள்ளங்கி,கோம்பை,தாண்டிக்குடி,பண்ணைக்காடு,செண்பக னூர்,புலியூர்,மாட்டுப்பட்டி, நாயுடுபுரம், சின்னப்பள்ளம்,பெரும் பள்ளம்,
அப்சர்வேட்டரி,வட்டக்கானல் உள்பட 25-க்கும் மேற்பட்ட குக்கிராமங்களில், ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாய நிலங்கள் உள்ளன.
இந்த விவசாய நிலங்களில் கேரட்,பீன்ஸ்,உருளை,முள்ளங்கி,நூக்கல்,பீட்ரூட், முட்டைக்கோஸ், சௌ சௌ,காபி,வாழை,பூண்டு போன்ற பணப் பயிர்கள் விளைவிக்கப்பட்டு, வெளி இடங்களான மதுரை,திண்டுக்கல்,திருச்சி,சென்னை,தேனி, பெங்களூரு,கேரளம் போன்ற இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகிறது.
ஆனால், கடந்த 15 ஆண்டுகளாக கொடைக்கானலில் விவசாய நிலங்கள் விற்பனை செய்யப்பட்டு காட்டேஜ்களாகவும், விடுதிகளாகவும் மாற்றப்பட்டு வருகின்றன. இதனால், காய்கறி உற்பத்தி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

கேரளத்தைச் சேர்ந்தவர்களும், சென்னை,மதுரை,கோவை,திருச்சி போன்ற இடங்களைச் சேர்ந்தவர்களும் விவசாய நிலங்களை வாங்கி, பிளாட் அமைத்து விற்பனை செய்து வருகின்றனர்.
கொடைக்கானல் பகுதிகளில், அடுக்குமாடிக் கட்டடங்கள் எழுப்பக் கூடாது என்பது உள்பட பல்வேறு உத்தரவுகள் இருந்தும், அவை மீறப்படுவதாகக் கூறப்படுகிறது.
கட்டடம் கட்டுவதற்குத் தேவையான பாறைகளை வெடிவைத்து உடைத்து எடுத்துக் கொள்கின்றனராம். மேலும் மரங்களையும் வெட்டி வருவதாகக் கூறப்படுகிறது.
கட்டடங்களுக்காக பல இடங்களில் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்படுவதால் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து வருகிறது.
தற்போது விவசாயிகளே அந்த இடத்தில் கொத்தடிமைகளாக வேலை பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது.
கொடைக்கானலில் எங்கு பார்த்தாலும் கான்கிரீட் கட்டடங்களாகக் காட்சி தருகிறது. இதனால், மலைவாழ் மக்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.
மாவட்ட நிர்வாகம் இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் கோரிக்கையாகும்.
வில்பட்டி கிராம நிர்வாக அலுவலர் ஞானவடிவேல் கூறியதாவது:
கொடைக்கானலில் பல்வேறு பகுதிகளில் விவசாய நிலங்களில் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. நாங்கள் அனுமதி தராவிட்டாலும், அரசியல் செல்வாக்கோடு பலர் அனுமதி பெற்று, அடுக்குமாடிக் கட்டடம் கட்டி வருகின்றனர். நகர் பகுதிகளில், நகராட்சி அனுமதியுடன் குடியிருப்புப் பகுதிகளில் காட்டேஜ்களை கட்டி வருகின்றனர்.
வில்பட்டி பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதி கொடுக்கவில்லை. இருப்பினும், மறைமுகமாக கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இதனைத் தடுக்க, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## விவசாயிகளுக்கு ரூ. 1 கோடி வங்கிக் கடன்

First Published : 12 Aug 2012 12:41:11 PM IST

மயிலாடுதுறை, ஆக. 11: மயிலாடுதுறை விஜயா வங்கி கிளையில் நாகை, திருவாரூர், தஞ்சை மாவட்டங்களைச் சேர்ந்த 100 விவசாயிகளுக்கு ரூ. 1 கோடி விவசாயக் கடன் சனிக்கிழமை வழங்கப்பட்டது.
இந்த சிறப்பு முகாமில் வங்கியின் முதன்மை உதவிப் பொது மேலாளர் (கடன்) ஜி. வாசுதேவன் விவசாயக் கடன்களை வழங்கிப் பேசியது:
இந்த முகாமில் மயிலாடுதுறை கிளை சார்பில் மயிலாடுதுறை வட்டம், பட்டவர்த்தி, வடவஞ்சார், தலைஞாயிறு, இளந்தோப்பு உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் 80 பேருக்கும்,

திருவாரூர் வங்கி கிளையின் சார்பில் 10 பேருக்கும், தஞ்சை கிளையின் சார்பில் 10 பேருக்கும் ரூ. 1 கோடி வரை முதற்கட்டமாக கடன் வழங்கப்பட்டுள்ளது என்றார். மண்டல உதவிப் பொது மேலாளர் பி. அய்தப்ப ஷெட்டி, மண்டல அதிகாரி (கடன்) புவனேஸ்வரி, வங்கி கிளை மேலாளர்கள் கிருஷ்ணன் (மயிலாடுதுறை), பாஸ்கர் (திருவாரூர்), கோபாலகிருஷ்ணன் (தஞ்சை) ஆகியோர் பேசினர். இளந்தோப்பு ஊராட்சித் தலைவர் ஜெயகோபால் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கரும்பில் அதிக மகசூலுக்கு கோ.86032 ரகம் பயிரிட யோசனை

First Published : 12 Aug 2012 12:39:41 PM IST

தஞ்சாவூர், ஆக.11: கரும்பில் அதிக மகசூல் பெற விவசாயிகள் கோ.86032 ரகத்தை பயிரிடலாமென குருங்குளம் சர்க்கரை ஆலையின் தலைமை நிர்வாகி கூறினார்.

தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை சார்பில் கந்தர்வகோட்டை அருகேயுள்ள புதுநகர் கிராமத்தில் இயந்திரம் மூலம் கரும்பு நடவு செய்தல் குறித்த செயல்விளக்க நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில், பங்கேற்ற ஆலையின் தலைமை நிர்வாகி தினேஷ்பொன்ராஜ் ஆலிவர் கூறியதாவது: கரும்பு விவசாயிகள் அதிக லாபம் பெற அகலப்பார் அமைத்து நிலத்தடி சொட்டுநீர் பாசனம் மூலமாக நீர்பாய்ச்சலாம்.

இதனால், விவசாயிகளுக்கு சாகுபடி செலவு குறைந்து அதிக லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது. அரசு மானியம், வங்கிக்கடன் வசதி அனைத்தும் ஆலையின் சார்பில் ஏற்பாடு செய்து தரப்படும்.

சர்க்கரை கட்டுமானத்தைக் கூட்டவும், விவசாயிகள் அதிக மகசூல் பெற வேண்டியும் கரும்பு ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து தரமான கோ.86032 விதைக்கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்படும். விதைக்கரும்பு தேவைப்படும் விவசாயிகள் அந்தந்த கோட்டக் கரும்பு அலுவலரைத் தொடர்பு கொண்டு நாற்றங்கால் நடவிற்குத் தேவையான விதைக்கரும்பு பெற்று நடவு செய்யலாம் என்றார்.

ஆலையின் தலைமை கரும்பு அலுவலர் கே.எஸ். சந்திரசேகரன் நவீன கரும்பு சாகுபடி குறித்து பேசுகையில், வழக்கமான நடைமுறையில் ஏக்கருக்கு 4 டன் விதைக் கரும்பு தேவைப்படுகிறது. ஆனால், நவீன கரும்பு சாகுபடி முறையில் 1 சென்ட் இடத்தில் நாற்றங்கால் தயார் செய்து அதில் 50 கிலோ விதைப்பருக்கள் வைத்து 25 நாள்கள் கழித்து தரமான நாற்றுகளை பெற்று நடவு செய்யலாம். இதனால் கூடுதல் மகசூல் 20 சதம் கிடைக்கும் என்றார்.

கந்தர்வகோட்டைக் கோட்ட கரும்பு அலுவலர் டி.எஸ்.ஆர். ராஜா, இயந்திரம் மூலமாக கரும்பு நடவு செய்யும் முறை, கரும்பில் தோகையை கத்தி மூலமாக உறிப்பது குறித்து செயல் விளக்கம் காட்டினார். விவசாய அலுவலர் தங்கபாண்டியன் சொட்டுநீர் பாசனம், கருவிகளுக்கு அரசு

வழங்கும் மானியம் குறித்தும், கரும்பு அலுவலர் துரைராஜ் இடைக்கணுப்புழுவை கட்டுப்படுத்த ஒட்டுண்ணி விடுதல் குறித்தும் விளக்கினர்.

கரும்பு வளர்ச்சி உதவியாளர் விஸ்வநாதன் நன்றி கூறினார்.

## தோட்டக்கலை இடுபொருள் வழங்கும் விழா

First Published : 12 Aug 2012 11:21:47 AM IST

சிதம்பரம், ஆக. 11: சிதம்பரம் அருகே தெற்கு பிச்சாவரத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்புல மாணவர்கள் கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் தோட்டக்கலை இடுபொருள் வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றது.

÷மாணவர் அ.சதீஷ்குமார் தலைமை வகித்தார். ஊராட்சி மன்றத் தலைவர் கேசவன் தலைமை வகித்தார்.

÷வேளாண்புல உதவிப் பேராசிரியர் முனைவர் தி.ராஜ்பிரவீன் பங்கேற்று மாணவர்கள் கிராமத்தில் தங்கிப் பயிற்சி பெறும் திட்டத்தின் நோக்கங்கள் குறித்து விளக்கவுரையாற்றினார்.

÷தமிழ்நாடு விவசாயிகள் சங்க செயலர் கண்ணன், மாணவர்கள் சார்பில் இலவச தோட்டக்கலை இடுபொருள்களை வழங்கினார்.÷விழாவில், தோட்டக்கலை விவசாயிகள், வார்டு உறுப்பினர் சாமிக்கண்ணு மற்றும் சுயஉதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் பங்கேற்றனர். மாணவர் கு.யுவராஜ் நன்றி கூறினார்.

## வேளாண் தொழில்நுட்பம்: செயல்முறை விளக்க முகாம்கள்

First Published : 12 Aug 2012 12:20:42 PM IST

திருச்சி, ஆக. 11 : திருச்சி அன்பில் தர்மலிங்கம் அரசு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகள் வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து பல்வேறு கிராமங்களில் விவசாயிகளுக்கு நேரடி செயல்முறை விளக்க முகாம்களை நடத்தினர்.

புள்ளம்பாடி வெங்கடாஜலபுரத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமில், விவசாயிகள் நீடித்த மற்றும் நிலையான வருவாய் பெற உணவுப் பயிர் சாகுபடியை மட்டும் நம்பியிருக்காமல், தீவனப்புல் சாகுபடி, கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு உள்ளிட்ட ஒருங்கிணைந்த பண்ணையத்தை அமைக்க வேண்டும் என யோசனை தெரிவித்தனர். செம்மை கரும்பு சாகுபடி மூலம் குறைந்த அளவில் விதைக் கரணைகளைப் பயன்படுத்தி நடவு செய்யலாம். இதன் மூலம் விதைக் கரணைகளுக்கான செலவு 75% குறையும், விதை முளைப்புத் திறனும் அதிக அளவில் இருக்கும் என மாணவிகள் விளக்கமளித்தனர்.

"நாட்டுக் கோழி பண்ணை அமைக்க விண்ணப்பிக்கலாம்'

First Published : 12 Aug 2012 11:24:16 AM IST

காஞ்சிபுரம், ஆக. 11: காஞ்சிபுரம் மாவட்டத்தில் விருப்பமுள்ள விவசாயிகள் நாட்டுக் கோழி பண்ணை அமைக்க விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியர் ஹனீஷ் சாப்ரா அறிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 35 நாட்டுக் கோழி பண்ணைகள் அமைக்க தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இத்திட்டத்தின் மூலம் விருப்பம் உள்ள விவசாயிகள் தங்களது சொந்த நிலத்தில் கோழிப்பண்ணை கட்ட வேண்டும். கொட்டகை அமைத்தல், உபகரணங்கள் வாங்குதல் உள்ளிட்ட செலவினத்துக்காக ரூ. 29,250-ஐ அரசு வழங்கும். 250 கோழிக் குஞ்சுகள் 14 வாரங்களுக்கு ஒரு முறையென 3 தவணைகளில் வழங்கப்படும்.

நாட்டுக்கோழி விநியோகஸ்தர்கள் மற்றும் வங்கிகள் மூலமாக தெரிவு செய்யப்பட்டு கோழிக்குஞ்சுகள் வழங்கப்படும். தேவையான தீவனம், மருந்துகள் பயனாளிகளே வாங்கிக் கொள்ள வேண்டும். ஒரு கோழிக்குஞ்சின் விலை ரூ. 30 எனக் கொண்டு, 250 கோழிக்குஞ்சுகளுக்கு 2-வது தவணையில் ரூ.3,250, 3-வது தவணையில் ரூ. 2,500 என மொத்தம் ரூ. 5,750 என ஊக்கத் தொகையாக அரசு வழங்கும்.

விருப்பமுள்ள விவசாயிகள் அருகில் உள்ள அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளையோ அல்லது கூட்டுறவு வங்கிகளையோ அணுகி தங்களது விருப்பத்தைத் தெரிவித்து நாட்டுக் கோழிப் பண்ணை அமைக்க விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியர் ஹனீஷ் சாப்ரா அறிவித்துள்ளார்.

முட்டை விலை

First Published : 12 Aug 2012 02:29:04 PM IST

நாமக்கல், ஆக. 11 : நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு சனிக்கிழமை, அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.3.07, சென்னையில்

ரூ. 3.15. கறிக்கோழி விலை பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு சனிக்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.48, முட்டைக் கோழி கிலோ ரூ.45.

கோழிப் பண்ணை அமைக்க 50% மானியம்

First Published : 12 Aug 2012 12:34:49 PM IST

பெரம்பலூர், ஆக. 11: பெரம்பலூர் மாவட்டத்தில் கோழிப் பண்ணை அமைக்க விரும்புவோருக்கு 50 % மானியம் வழங்கப்படும் என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில் கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ், கறிக்கோழி, முட்டைக்கோழி பண்ணைகள் அமைக்க விருப்புவோருக்கு தமிழக அரசு சார்பில் கோழிக் கொட்டகைகள் கட்டுவதற்கு, உபகரணங்கள் வாங்குவதற்கு 50 சத மானியம் வழங்கப்படுகிறது.

இதில், 25 சதம் தமிழக அரசு சார்பிலும், 25 சதம் நபார்டு வங்கியின் கோழி துணிகர முதலீட்டு நிதியிலிருந்தும் வழங்கப்படுகிறது. மானியத் தொகை 50 சதம் போக, மீதமுள்ள 50 சதம் பயனாளிகள் தங்களது சொந்த செலவிலோ, தங்கள் பகுதிக்குள்பட்ட வங்கியிலிருந்து கடனாகவோ பெற்றுக்கொள்ளலாம். இந்த மானியத் தொகை 1,000 முதல் 5,000 கோழிகள் வரை வளர்க்கும் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

விவசாயிகள், தொழில் முனையும் தனிநபர், சுய உதவிக் குழுவினர் ஆகியோர் இத்திட்டத்தில் விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவர். இத்தொழிலில் முன் அனுபவம் உள்ளவர்களும், ஏற்கெனவே கோழிப் பண்ணை அமைத்திட கொட்டகை அமைத்த பயனாளிகள் புதிய கொட்டகை அமைத்துக் கொள்ளவும், தற்போது குறைந்த எண்ணிக்கையில் கோழி வளர்த்து வருபவர்கள் அதை விரிவாக்கம் செய்யவும் விண்ணப்பிக்கலாம். இந்தப் பண்ணை அமைக்க போதிய நிலம் தங்களது பெயரிலோ அல்லது தங்கள் குடும்ப உறுப்பினர் பெயரிலோ இருக்க வேண்டும். திட்டத்துக்காக தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு, தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் பயிற்சி மையங்களில் பயிற்சிகள் அளிக்கப்படும். தகுதியுடையோர் மாவட்ட ஆட்சியரால் அங்கீகரிக்கப்பட்ட கோழிப் பண்ணை ஒருங்கிணைப்பாளரின் கடிதம், தேர்வு செய்யப்பட்ட வங்கியிலிருந்து ஒப்புதல் கடிதம் அல்லது சொந்த நிதியிலிருந்து பண்ணை அமைக்க விருப்பமுள்ளவர்கள் அதற்கான நிதி ஆதார சான்றுகளுடன் விண்ணப்பங்களை ஆட்சியரிடம் அளிக்க வேண்டும் என்றார் அவர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

## உற்பத்தியாளர்கள் கூட்டு முயற்சியில்பருத்தி கொள்முதலுக்கு பொது அமைப்பு



திருப்பூர்:தமிழக ஜவுளித் துறையினர் பயனடையும் வகையில், 'காஸ்கோ' என்ற மொத்த பருத்தி கொள்முதல் நிறுவனத்தை துவக்க, பின்னலாடை துறையினர் திட்டமிட்டு உள்ளனர்.அமெரிக்காஉலக அளவில், அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இந்தியாவில் பருத்தி அதிகம் விளைகிறது. இருப்பினும், மத்திய அரசின் பருத்தி கொள்கையால், உள்நாட்டு தேவைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, மற்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. இந்நிலையை மாற்றி, பருத்தி தேவைகளில் தன்னிறைவு அடையும் வகையில், தொழில் துறையினரின் கூட்டு முயற்சியாக, 'காஸ்கோ' (காட்டன் சோர்ஸிங் கம்பெனி) என்ற பருத்தி கொள்முதல் நிறுவனம் துவக்கப்பட உள்ளது.

வட மாநில வியாபாரிகளின் ஆதிக்கத்தால், தமிழக நூற்பாலைகள் கூடுதல் விலை கொடுத்து பருத்தி வாங்க வேண்டியுள்ளது. எனவே, பொது நிறுவனம் மூலமாக, இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் பருத்தியை கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.'காஸ்கோ' நிறுவன செயல் இயக்குனர் ராஜா சண்முகம் கூறியதாவது:நூற்பாலை உரிமையாளர்கள், ஜவுளி உற்பத்தியாளர்கள் என தனித்தனியாக சென்று பருத்தி கொள்முதல் செய்வதை காட்டிலும், மொத்தமாக வாங்கினால் 10 சதவீதம் வரை செலவு மிச்சமாகும். நேரடி கொள்முதல்:ஒரே நிறுவனம் மொத்த கொள்முதல் செய்யும்போது, மூன்று சதவீதம் வரை விலை குறைய வாய்ப்புள்ளது.

மேலும் கூடுதலாக இரண்டு சதவீதம் சலுகை கிடைக்கும்.உற்பத்தியாளர்களை உறுப்பினராக கொண்ட 'காஸ்கோ' நிறுவனமே நேரடியாக கொள்முதல் செய்வதால், இடைத்தரகர்களுக்கு

வேலை இருக்காது; தரகு செலவு குறையும். லாரிகளில் தனித்தனியே பருத்தி எடுத்து வருவதைவிட, மொத்தமாக கப்பலில் எடுத்து வந்தால், ஆறு முதல் ஏழு சதவீதம் செலவு குறையும்.'காஸ்கோ' பருத்தி கொள்முதல் நிறுவனம், வரும் பருத்தி ஆண்டு முதல், கோவையில் தலைமை அலுவலகத்தை கொண்டு இயங்கும். அனுபவம் வாய்ந்த தொழில் ஆலோசகர்களும், நிபுணர்களும் 'காஸ்கோ' நிறுவனத்தில் இருப்பர். இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

**எள் விளைச்சல் குறைவால் எண்ணெய் விலை விர்...**



ஈரோடு:தமிழகத்தில், எள் விலையில் திடீர் உயர்வு ஏற்பட்டதை அடுத்து, அதனை மூலப் பொருளாக கொண்டு தயார் செய்யப்படும் நல்லெண்ணெய் விலை, லிட்டருக்கு, 12 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.தமிழகத்தில், ஈரோடு மாவட்டத்தில் அதிக அளவில் எள் பயிரிடப்படுவது வழக்கம். ஆனால், நடப்பாண்டு எள் விளைச்சல் எதிர்பார்த்த அளவிற்கு இல்லை.தமிழக எண்ணெய் ஆலைகளுக்கு, கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களில் இருந்து விற்பனைக்கு வந்து கொண்டிருந்த எள், முற்றிலும் நின்று விட்டது. இதனால், தமிழகத்தில் எள்ளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு, அதன் விலை உயர்ந்துள்ளது.
கடந்த வாரம், தமிழக சந்தைகளில், ஒரு கிலோ வெள்ளை எள், 120 ரூபாய்க்கு விற்பனையானது. இது, தற்போது 20 ரூபாய் அதிகரித்து, 140 ரூபாயாக உயர்ந்துள்ளது. எண்ணெய் உற்பத்தியில் அதிக அளவில் பயன்படுத்தப்படும் கறுப்பு எள், விலை கிலோவுக்கு 10 ரூபாய் அதிகரித்து, 80 ரூபாயில் இருந்து 90 ரூபாயாக உயர்ந்துள்ளது.எள் விலை உயர்வால், நல்லெண்ணெய் விலையும் அதிகரித்துள்ளது. பிரபல நிறுவனங்களின் நல்லெண்ணெய் விலை, லிட்டருக்கு 12 ரூபாய் அதிகரித்து, 172 ரூபாயாக உயர்ந்துஉள்ளது.அது போன்று, 120 ரூபாய்க்கு விற்பனையான, ஒரு லிட்டர் உள்ளூர் தயாரிப்பு எண்ணெய் விலை, 132 ரூபாயாக உயர்ந்துள்ளது.
இது குறித்து, எண்ணெய் வியாபாரி சர்புதீன் கூறியதாவது:தமிழகத்தில், எள் விளைச்சல் பாதிக்கப்பட்டால், எண்ணெய் மில்களுக்கு, கர்நாடகா, ஆந்திரா மாநில எள் வகைகள் கை கொடுக்கும். ஆனால், நடப்பாண்டில் உள்ளூரில் எள் விளைச்சல் குறைந்துள்ள நிலையில், வெளி

மாநில எள்ளின் வரத்தும் இல்லை.இதனால், தமிழகத்தில் எள்ளுக்கான தேவை அதிகரித்து, கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. இந்த தட்டுப்பாட்டை, தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்ட வியாபாரிகள், அதிக அளவில் எள்ளை பதுக்கி விட்டனர். இதனால் எள் விலை கிலோவுக்கு, 10 முதல், 20 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.நல்லெண்ணெய் விலை உயர்வை அடுத்து, தேங்காய் எண்ணெய், பாமாயில் ஆகியவற்றின் விலையும் உயரும். இவ்வாறு அவர் கூறினார்.

### முட்டைக்கோழி விலை மீண்டும் அதிகரிப்பு



நாமக்கல்:நாமக்கல் மண்டலத்துக்கு உட்பட்ட பகுதியில், 800க்கும் அதிகமான கோழிப்பண்ணைகள் உள்ளன. அதன் மூலம் நாள்தோறும் மூன்று கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. முட்டை உற்பத்திக்காக, 16 முதல், 18 வார வயதுடைய கோழிகள், பண்ணைகளில் விடப்படுகின்றன. அந்தக் கோழிகள்,
52வது வாரம் முதல், 70 வாரம் வரை முட்டையிடும்.
கேரளா:அதன்பின், கோழி முட்டையிடுவது குறைந்துவிடும். அதையடுத்து, அக்கோழிகள் இறைச்சிக்காக அனுப்பப்படும். குறிப்பாக, முட்டைக் கோழிகள், கேரள மாநிலத்திற்கு அதிகளவில் அனுப்பப்பட்டு வருகின்றன. ஸ்ராவன் பண்டிகை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், வட மாநிலங்களில் முட்டை நுகர்வு கணிசமான அளவு குறைந்தது.அதன் எதிரொலியாக, முட்டை விலை, கடந்த ஒரு மாத காலமாக, நாடு முழுவதும் கடும் சரிவை கண்டு வந்தது. அதே சமயம், முட்டைக் கோழிகளின் விற்பனை அதிகரித்தது. விலையும் குறைந்தது. ஜூலை மாதம் 28ம் தேதி நிலவரப்படி, ஒரு கிலோ முட்டைக் கோழி, 35 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. எனினும், போக்குவரத்து செலவு உள்ளிட்டவற்றுக்காக, மொத்த விற்பனையில், நான்கு ரூபாய் குறைத்து, 31 ரூபாய் என்ற விலையில் முட்டைக் கோழிகள் விற்பனை செய்யப்பட்டன.மூலப்பொருட்கள்:இது, கோழிப் பண்ணையாளர்கள் மத்தியில் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தி வந்தது. இதற்கிடையே, கோழித்தீவன மூலப்பொருட்கள் விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்தது.

இந்நிலையில், கடந்த 4ம் தேதி, முட்டை விலை, ஒரே நாளில் ஆறு காசுகள் உயர்த்தப்பட்டது. அதன்பின், முட்டை விலை தொடர்ந்து ஏற்றம் கண்டு வருகிறது. ஆறு நாட்களில், முட்டை விலை, 24 காசுகள் உயர்ந்துள்ளது. முட்டை விலை ஏற்றத்தால், முட்டைக் கோழி விற்பனையை, பண்ணையாளர்கள் குறைத்துள்ளனர். அதன் காரணமாக, இறங்கு முகத்தில் இருந்த முட்டைக் கோழி விலை, 9ம் தேதி நிலவரப்படி, ஒரே நாளில், 10 ரூபாய் உயர்த்தப்பட்டு, கிலோ, 45 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

உற்பத்தி செலவு:இதுகுறித்து, கோழிப்பண்ணையாளர்கள் சிலர் கூறியதாவது:வட மாநில ஸ்ராவன் பண்டிகை, கோடை வெப்பம் உள்ளிட்டவற்றால், நாடு முழுவதும் முட்டை விலையில் பெரும் சரிவு ஏற்பட்டது. நுகர்வு குறைவு காரணமாக, உற்பத்தி செலவைக் காட்டிலும், குறைவான விலைக்கே, முட்டை விற்பனை செய்யும் நிலை உருவானது.அதில் பாதிக்கப்பட்ட பலர், முட்டை உற்பத்தியை குறைக்க, முட்டைக் கோழிகளை அதிகளவு விற்பனை செய்தனர். அதனால், முட்டைக் கோழி விலை நாளுக்கு நாள் சரிந்தது. தற்போது, முட்டை நுகர்வு அதிகரித்துள்ளதால், முட்டை விலை ஏற்றம் கண்டு வருகிறது.எனவே, பண்ணையாளர்கள், முட்டைக் கோழி விற்பனையை குறைத்துள்ளனர். இதனால், முட்டைக் கோழி விலையும் உயர்ந்து வருகிறது. இந்த விலையேற்றம், அடுத்த சில மாதங்களுக்கு நீடிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## வரத்து குறைவால் இஞ்சி விலை உயர்வு



சேலம்:சேலத்தில் இஞ்சி வரத்து குறைந்ததால், அதன் விலை, ஒரு மூட்டைக்கு (55 கிலோ), 700 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.பெங்களூரு மற்றும் மைசூர் பகுதிகளில், அதிகளவிலான இஞ்சி, சாகுபடி செய்யப்படுகிறது. இங்கிருந்து, தமிழ்நாடு, டில்லி, கர்நாடகா உள்பட பல்வேறு வெளிமாநிலங்களுக்கு விற்பனைக்காக இஞ்சி அனுப்பி வைக்கப்படுகிறது. இந்நிலையில், கடந்த சில நாட்களாக, இஞ்சி விலை ஏறுமுகமாகவே உள்ளது.கடந்த, 10 நாட்களுக்கு முன்பு, ஒரு மூட்டை இஞ்சி (55 கிலோ), மொத்த விலையில், 1,800 முதல், 2,000 ரூபாய் வரை இருந்தது. இது,

கடந்த ஒரு வார காலமாகத் திடீரென ஒரு மூட்டைக்கு, 700 ரூபாய் வரை உயர்ந்து, 2,500 முதல், 2,700 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**இதுவரை இல்லாத வகையில்...கடல் உணவு பொருட்கள் ஏற்றுமதியில் புதிய சாதனை**



கொச்சி:இந்தியா, சென்ற 2011-12ம் நிதியாண்டில், 351 கோடி டாலர் (19 ஆயிரத்து 305 கோடி ரூபாய்) அளவிற்கு கடல் உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்து, புதிய சாதனை படைத்துள்ளது. அளவு, ரூபாய் மற்றும் டாலர் மதிப்பின் அடிப்படையிலும் ஏற்றுமதி அதிகரித்துள்ளது.

இலக்கு நிர்ணயம்:இதையடுத்து, நடப்பு 2012-13ம் நிதியாண்டில், கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதியை, 450 கோடி டாலராக (24,750 கோடி ரூபாய்) அதிகரிக்க, இலக்கு நிர்ணயித்துள்ளதாக, கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.சென்ற நிதியாண்டில், அள வின் அடிப்படையிலான கடல் உணவு பொருட்கள் ஏற்றுமதி, 8,62,021 டன்னாக உயர்ந்துள்ளது.

இது, முந்தைய 2010-11ம் நிதியாண்டில், மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட, 6.02 சதவீதம் அதிகமாகும். மேலும், ரூபாய் மதிப்பிலான வளர்ச்சி 28.65 சதவீதமாகவும், டாலர் மதிப்பிலான வளர்ச்சி 22.81 சதவீதமாகவும் அதிகரித்துள்ளன.நம் நாட்டின் கடல் உணவுப் பொருட்கள், தென் கிழக்கு ஆசிய நாடுகள், ஜப்பான், மேற்காசிய நாடுகள், அமெரிக்கா, ஐரோப்பா, ஆப்ரிக்கா, சீனா உள்ளிட்ட உலகின் பல நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

பொருள் குவிப்பு வரி:சர்வதேச பொருளாதார மந்த நிலை, ஐரோப்பிய நாடுகளின் நிதி நெருக்கடி, இந்திய இறால்களின் இறக்குமதிக்கு அமெரிக்காவில் விதிக்கப்பட்டுள்ள பொருள் குவிப்பு வரி, மேற்காசிய நாடுகளின் ஸ்திரமற்ற அரசியல் நிலை போன்ற பல்வேறு பிரச்னைகளுக்கு இடையிலும், இந்தியாவின் கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி சிறப்பாக வளர்ச்சி கண்டு வருகிறது.

கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி, அளவு மற்றும் மதிப்பின் அடிப்படையில் அதிகரித்து வரும்

அதே நேரத்தில், டாலருக்கு எதிரான ரூபாயின் வெளி மதிப்பு சரிவடைந்து வருவதாலும், இதன் ஏற்றுமதி மதிப்பு உயர்ந்து வருகிறது.

'வண்ணமே' இறால்கள்:இந்தியாவிலிருந்து, பல்வேறு வகையான மீன் மற்றும் இறால் வகைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 'வண்ணமே' மற்றும் 'பிளாக் டைகர்' வகை இறால்ஏற்றுமதி தொடர்ந்து சிறப்பான அளவில் அதிகரித்து வருகிறது.

இவை தவிர, கட்லா மீன் வகைகளும், அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மொத்த கடல் உணவு பொருட்கள் ஏற்றுமதியில், மேற்கண்ட மீன் வகைகளின் பங்களிப்பு அதிகளவில் உள்ளது.

சென்ற நிதியாண்டில், அமெரிக்காவிற்கான 'வண்ணமே' இறால் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 212 சதவீதமும், டாலர் மதிப்பின் அடிப்படையில், 209 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. அதே சமயம், சீனாவிற்கான ஏற்றுமதி அளவு மற்றும் டாலர் மதிப்பு அடிப்படையிலான ஏற்றுமதி முறையே, 46.89 சதவீதம் மற்றும் 40.17 சதவீதம் என்றளவில் சரிவடைந்துள்ளது.

மொத்த வருவாய்:நாட்டின் கடல் உணவு பொருட்கள் ஏற்றுமதி மூலம் கிடைக்கும், மொத்த வருவாயில், பதப்படுத்தப்பட்ட இறால்களின் பங்களிப்பு, 49.63 சதவீதம் என்றளவில் உள்ளது.

மதிப்பீட்டு காலத்தில், இறால் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் 24.86 சதவீதம் அதிகரித்துள்ளது.

இதே காலத்தில், இதன் ரூபாய் மற்றும் டாலர் மதிப்பிலான ஏற்றுமதி, முறையே, 42.97 சதவீதம் மற்றும் 37.99 சதவீதம் என்ற அளவில் உள்ளன

இந்தியாவில் 'வண்ணமே' வகை இறால்களின் உற்பத்தியை அதிகரிக்க, சிறந்த உற்பத்தி கூடம் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக, மதிப்பு கூட்டப்பட்ட 'வண்ணமே' இறால்களை அதிகளவில் ஏற்றுமதி செய்ய முடியும்.

இதையடுத்து, நடப்பு நிதியாண்டில், கடல் உணவு பொருட்கள் ஏற்றுமதிக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எளிதாக எட்ட முடியும் என, இக்கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தென் கிழக்கு ஆசியா முதலிடம்:இந்திய கடல் உணவு பொருட்களின் ஏற்றுமதியில் தென் கிழக்கு ஆசிய நாடுகள் முதலிடத்தை பிடித்துள்ளன. சென்ற நிதியாண்டில், இந்நாடுகளுக்கான ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் 39.90 சதவீதமாகவும், டாலர் மதிப்பின் அடிப்படையில், 25.09 சதவீதம் என்றளவிலும் உள்ளது.

இரண்டாவது இடத்தில், ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் உள்ளன. இந்தியாவின் கடல் உணவு பொருட்களின் ஏற்றுமதியில், ஐரோப்பிய நாடுகளின் பங்களிப்பு 22.96 சதவீதம் என்ற அளவில் உள்ளது. அடுத்த இடங்களில், அமெரிக்கா (18.17 சதவீதம்), ஜப்பான் (13.01 சதவீதம்), சீனா (7.51 சதவீதம்), மேற்கு ஆசிய நாடுகள் (5.33 சதவீதம்), இதர நாடுகள் (7.95 சதவீதம்) உள்ளன.

தேயிலை ஏற்றுமதி 18 கோடி கிலோவாக குறையும்



மும்பை:சர்வதேச பொருளாதார மந்த நிலை, விலை அதிகரிப்பு போன்றவற்றால், நடப்பு 2012ம் ஆண்டில், இந்தியாவின் தேயிலை ஏற்றுமதி 1.30 கோடி கிலோ குறையும் என, 'இக்ரா' நிறுவனம் தெரிவித்துள்ளது. இதன்படி, தேயிலை ஏற்றுமதி, 19.30 கோடி கிலோவிலிருந்து, 18 கோடி கிலோவாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பயன்பாடு:வேகமாக வளர்ச்சி கண்டு வரும் காபி சந்தை, தேயிலை பயன்பாட்டில் சரிவை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக, ஐரோப்பிய நாடுகளில், தேயிலைக்கான தேவை குறைந்து, காபி பயன்பாடு அதிகரித்துள்ளது. மேலும், அண்மையில் காபி விலை மிகவும் சரிவடைந்துள்ளது. இதன் காரணமாகவும், காபிக்கான தேவை அதிகரித்து, தேயிலை பயன்பாடு வீழ்ச்சி கண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. நடப்பாண்டில், உள்நாட்டில், தேயிலை உற்பத்தி மிகவும் சரிவடையும். அதேசமயம், உள்நாட்டில் இதன் பயன்பாடு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவும், இந்தியாவின் தேயிலை ஏற்றுமதி சரிவிற்கு முக்கிய காரணமாக அமையும்.நடப்பு 2012ம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில், இந்தியாவின் தேயிலை உற்பத்தி 11.4 சதவீதம் வீழ்ச்சி கண்டுள்ளது. குறிப்பாக, வட இந்தியாவில் இதன் உற்பத்தி 12.2 சதவீதமும், தென்னிந்தியாவில் 10.2 சதவீதமும் சரிவைக் கண்டுள்ளது.

ஒட்டு மொத்த அளவில், உள்நாட்டில் தேயிலை உற்பத்தி 95 கோடி கிலோவாக சரிவடையும் என, 'இக்ரா' நிறுவனம் தெரிவித்துள்ளது.

மதிப்பீடு:சென்ற 2011ம் ஆண்டில், 2.3 சதவீதமாக இருந்த தேயிலை பயன்பாடு, நடப்பாண்டில், 2.2 சதவீதமாக சற்று குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில், சர்வதேச அளவில் தேயிலை உற்பத்தி 2 சதவீதமும், பயன்பாடு 2.9 சதவீதமும் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சென்ற 2011ம் ஆண்டில், சர்வதேச சந்தைகளில், ஒரு கிலோ தேயிலையின் சராசரி விலை, எப்போதம் இல்லாத அளவாக, 2.92 டாலராக இருந்தது. இது, நடப்பாண்டில், 3 டாலராக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மகாராஷ்டிரா மாதுளையால் விலை குறைந்தது

1 Comments



சேலம்:மாதுளை சீஸன் துவங்கி விட்டதால், மகாராஷ்டிரா மாநிலத்தை சேர்ந்த மாதுளைகள், சேலத்தில் விற்பனைக்காக குவியத் தொடங்கியுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும், ஆடி மாதம் துவங்கியதும், மாதுளை சீஸனும் களை கட்டி விடும். ரத்த சுத்திகரிப்புக்கும், சர்க்கரையின் அளவை கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளவும், மாதுளை பழங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன.

கடந்தாண்டை காட்டிலும், இந்தாண்டு, மாதுளை வரத்து முன்னதாகவே துவங்கி விட்டது.பெங்களூரு:மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள சாங்லி, ஜத்து, பண்டரிப்பூர், புனே, மினிராஜா, கோலாப்பூர், சோலாப்பூர் ஆகிய பகுதிகளை சுற்றி விளையும் மாதுளைகள், பெங்களூரு, சேலம் நகரத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.சேலத்துக்கு, தினமும் 10 டன் மாதுளை பழங்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. இங்கிருந்து, ஆத்தூர், சங்ககிரி, கள்ளக்குறிச்சி, ஓமலூர், வாழப்பாடி, விழுப்புரம் உட்பட பல்வேறு இடங்களுக்கு வேன் மற்றும் லாரிகள் மூலம் பெட்டிகளில் அடைக்கப்பட்டு அனுப்பப்படுகின்றன.கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு, ஒரு கிலோ மாதுளை, 150 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

தற்போது, ஒரு கிலோ மாதுளை, 70 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆடி பெருக்கு விழாவில் துவங்கி, நவராத்திரி, ஆயுதபூஜை, தீபாவளி, கிறிஸ்துமஸ் வரை தொடர்ந்து பண்டிகைகள் வரவுள்ளதால், மாதுளையின் வரத்து அதிகரித்துக் கொண்டே செல்லும்.புத்துணர்ச்சி:பெரிய வகை மாதுளை ஒரு கிலோ, 70- 80 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. சிறிய வகை மாதுளை கிலோ, 30 ரூபாய்க்கும், சாதாரண வகை மாதுளை கிலோ, 40 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

தற்போது, மகாராஷ்டிரா மாநிலத்தை சேர்ந்த மாதுளைகளே, தமிழகம் முழுவதும் விற்பனை செய்யப்படுகின்றன.மாதுளையில் உள்ள முத்துக்களை அப்படியே சாப்பிடலாம். சிலர், அதில் சர்க்கரையை சேர்த்து சாப்பிடுகின்றனர். மாதுளை ஜூஸ் குடித்தால் புத்துணர்ச்சி ஏற்படும்.